தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 185/பேரூ/2022
நாள் 23.11.2022

திரு. ஆர்.ஆர். ஹரிகுமார்,
புரவூர். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பளுகல் பேரூராட்சி. – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், மணிவிளை அஞ்சல், புரவூர், மயூரம், கதவு எண். 1/36 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஆர்.ஆர்.ஹரிகுமார் என்பவரின் 08.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2022 அன்று பெறப்பட்டு 185/பேரூ/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், மணிவிளை அஞ்சல், புரவூர், மயூரம், கதவு எண். 1/36 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஆர்.ஆர்.ஹரிகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“பளுகல் பேரூராட்சியில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளது. இது சம்பந்தமாக 10–க்கு மேற்பட்ட விஷயங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டிருந்தேன். அதற்கு சரியான தகவல் தரவில்லை.

1) 1/22 மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். 358 முதல் 407 வரைக்கும் ரூபாய் 19,96,903/–. 408 முதல் 455 முடிய ரூபாய் 22,55,379.00 எதற்காக செலவு செய்தது என்று தெரியவில்லை. இது பொதுமக்களின் வரிப்பணம் இதை முறைகேடாக பயன்படுத்தியது என்று தெள்ளத் தெளிவாகிறது.

2) அதைப்போல் பைப்லைன் நீட்டுவதிலிருந்தும் போர்வெல் அமைத்ததிலும் மோட்டார் வாங்கியதிலும் பெரும் ஊழல் நடந்துள்ளது. பல மோட்டார்களை எடுத்துவிட்டு போர்வெல்லுக்குள் கல்போட்டு விட்டுள்ளார். போர்வெல் அடித்து

விட்டு ஒரு நாள் கூட ஓடாத பம்புசெட்டுகள் உள்ளது. அதில் பொருத்தி விட்டுள்ள மின் மீட்டரை பார்த்தால் தெரியும் கேள்விகளுக்கு பேரூராட்சி தரப்பில் தந்த தகவல் அனைத்தும் தவறானது.

3) பேரூராட்சி ஒப்பந்த பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதில் முறைகேடு.

4) பேரூராட்சி ஒப்பந்தம் வழங்குவதில் முறைகேடு.

5) பைப் லயன் பேரூராட்சி பணியாளர்கள் செய்ய வேண்டிய வேலையை ரூபாய் 10,000/– மிகாமல் பணம் பட்டுவாடா செய்வதில் ஊழல்.

6) மன்றத்தில் ஒவ்வொரு வார்டிலும் வேலைக்கான மன்றத்தில் வைத்து பாஸ் செய்து விட்டு அந்த வேலைகள் செய்யாமல் செய்து அலுவலருக்கு வேண்டிய கவுன்சிலர் மற்றும் ஒப்பந்ததாரருடன் சேர்ந்து மன்ற அங்கீகாரம் இல்லாமல் நேரடியாக A.D. மற்றும் A.W.D.-க்கு மற்றும் பணியாளர்கள் பணம் வழங்கி A.S. வாங்கி மன்றத்தில் டெண்டர் வைப்பார்கள். இதனால் வார்டுகள் புறக்கணிக்கப்படுகிறது. அதற்கும் 30.09.2022 மன்றத்தில் வைத்து சப்ஜட்டுகள் பாஸ் ஆகவில்லை. இப்படி ஒருதலைபட்சமாக செயல்படுகிறார் செயல் அலுவலர்.

7) சந்தை சீர் செய்கிறேன் என்று மன்ற அனுமதி இல்லாமல் பல ஆயிரம் ரூபாய் நோட்டீஸ் அடித்தது விளம்பரம், பெயிண்ட் என ஊழல் நடந்துள்ளது.

8) எந்த பொருள் வாங்கினாலும் ஊழல் வளர்ச்சிப் பணியில் மேற்கொள்ளாமல் அடிப்பதிலே குறியாக உள்ளவர்கள். நான் தனிப்பட்ட நபரின் வாழ்க்கை வரலாறு ஒன்றும் கேட்கவில்லை. தேசிய பாதுகாப்பு மற்றும் தகவல் கேட்கக் கூடாத அமைப்பின் விவரங்கள் ஒன்றும் கேட்கவில்லை. பொது மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிய வேண்டிய பேரூராட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள் ஏதோ இந்திய இராணுவத்தின் இரகசியமான செயல் போலவும் அதில் செயல் அலுவலர் இராணுவத்தின் இரகசிய ஆவண காப்பாளர் போல் செயல்படுகிறார், சென்ற காலத்தில் மன்றம் இல்லாத சமயத்தில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஊழல் நடந்துள்ளது. ஆகவே தயவு கூர்ந்து விசாரித்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகிறேன் '' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

பளுகல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 08.11.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

வரிசை எண். 1

இதில் 01/2022 மாத செலவினங்கள் செலவு சீட்டு எண். 358 முதல 407 முடிய ரூபாய் 19,96,903/–ம் செலவு மேற்கொள்ளும்போது நான் பளுகல் பேரூராட்சியில் பணியில் இல்லை. மேலும் 408 முதல் 455 முடிய செலவுகள் ரூபாய் 22,55,379.00 தேர்தல் செலவுகள், தேர்தலில் பணியாற்றியவர்கள் ஊதியம், மின்கட்டணம், துாய்மைப்பணியாளர்கள் ஊதியம், அலுவலக பணியாளர்கள் ஊதியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் குடிநீர் கட்டணம் செலுத்தியது ஆகியவை மேற்கொண்டமைக்கான செலவுகள் ஆகும். இதற்கு மன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் செலவு மேற்கொண்டமைக்கான தீர்மான நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

வரிசை எண். 2

நான் இங்கு பணியாற்றிய காலத்தில் மின்மோட்டார் ஏதும் வாங்கப்படவில்லை. செலவுகளில் ஏதும் காண்பிக்கப்படவில்லை.

வரிசை எண்.3

பேரூராட்சி ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ரொக்கம் ஊதியம் ஏதும் வழங்கப்படவில்லை. ECS மூலம் அவரவர் வங்கி கணக்கிற்கு அனுப்பப்படுகிறது.

வரிசை எண். 4

பேரூராட்சி ஒப்பந்தங்கள் மூடி முத்திரையிட்ட கவர்களில் பெறப்பட்டு அதில் தகுதியான நபர்களில் குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு மன்ற அங்கீகாரம் பெறப்பட்டு வேலை உத்திரவும் வழங்கப்படுகிறது. இதில் அவர் கற்பனையாக காழ்ப்புணர்ச்சியில் கூறியுள்ளார்.

வரிசை எண்.5

பொதுமக்களின் புகார் மற்றும் குடிநீர் தேவையின் அவசியத்தை முன்னிட்டு போர்க்கால அடிப்படையில் மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால், கொட்டேஷன் அடிப்படையில் பொருட்கள் கிரயம் மற்றும் ஆட்கள் கூலியும் சேர்த்து பணிகள் செய்வதற்கு சிறிய வேலைகளாக இருப்பின் செய்து கொடுக்கப்படுகிறது. கூடுதல் செலவுகள் டெண்டர் வைத்து பணிமுடிந்த பின் மன்ற ஒப்புதல் பெற்று வழங்கப்படும். இதில் முறைகேடு ஏதும் இல்லை.

வரிசை எண். 6

திட்டப்பணிகள் கடந்த காலங்களில் அரசுக்கு அனுப்பப்பட்டு தற்போது காலதாமதமாகி வரும் திட்டப்பணிகள் மன்றத்தில் வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு டெண்டர் கோரப்படும். இதில் முறைகேடு ஏதும் இல்லை.

**வரிசை எண். 7**

சந்தையில் கொரோனா காலத்தில் அங்கிருந்தவர்கள் வெளியிடங்களுக்கு சென்று அருகில் கேரளா பகுதிகளின் வியாபாரம் செய்கிறார்கள், தற்போது அவர்களை மீண்டும் சந்தைப்பகுதிக்கு வரவழைக்கவேண்டி தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் நோட்டீஸ் அச்சடித்து மன்ற வார்டு உறுப்பினர்கள் தலைவர் மற்றும் உபத்தலைவர்களின் அலோசனையின்படி பேரூராட்சி வருமானத்தை பெருக்கும் நோக்கத்தில் செய்யப்பட்டது. இதற்கான செலவினம் மன்றம் அங்கீகரித்துள்ளது. இது முற்றிலும் கற்பனையான புகாராகும். மேலும் இப்பகுதி கேரளா எல்லை பகுதியில் உள்ளதால் இரண்டு மொழிகளிலும் (மலையாளம் மற்றும் தமிழ்) அச்சடித்து விளபரம்படுத்தப்பட்டது. அதன் பிறகு சந்தைப்பகுதியில் 4 கடைகள் ஏலம் விடப்பட்டு வருவாய் ஈட்டப்பட்டது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரும், 02.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. ஆனால் செயல் அலுவலர் 02.11.2022 அன்றைய தேதியில் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் மாற்று தேதி வேண்டி 29.10.2022 நாளிட்ட தனது கடிதத்தில் முறைமன்ற நடுவத்தை கேட்டுக் கொண்டதன் பொருட்டு, 08.11.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.10.2022 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(4) மனுதாரர் திரு. ஆர்.ஆர். ஹரிகுமார் 08.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி 9–வது வார்டு உறுப்பினராக உள்ளேன். வார்டு உறுப்பினராக உள்ள எனது பளுகல் பேரூராட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகிறது. அங்கு ஏற்படும் செலவீனங்களுக்கான வரவு செலவு கணக்கு முறையாக பராமரிக்கப்படுவதில்லை. இது தொடர்பாக மன்றக் கூட்டத்தில் வரவு செலவு விவரங்கள் என்னால் கோரப்பட்டும் எவ்வித தகவலும் எனக்கு அளிக்கவில்லை.

பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும்போது ஒப்பந்ததாரர்களிடம் Eligibility Certificate பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படுவதில்லை. பளுகல் பேரூராட்சியில் தற்காலிக ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியத்திலும் பெரும் ஊழல் நடைபெறுகிறது. மேற்கண்ட பேரூராட்சியில் ஒப்பந்த ஊழியர்கள் சுமார் 80 பேர் பணியாற்றி வருகின்றனர். ஒரு ஊழியருக்கு ரூபாய் 9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வீதம் கணக்கு காட்டி, அவர்களுக்கு வெறும் ரூபாய் 4 ஆயிரம் மட்டுமே வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பேரூராட்சியில் பைப்லைன் போடுவதிலும், போர்வெல் அமைப்பதிலும் மேலும் மோட்டார் வாங்காமல் புதிதாக வாங்கியதாகவும் கூறி பேரூராட்சியால் பண மோசடி செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. அங்கு சுமார் 250 மோட்டார்கள் உள்ளன. இதில் ஒன்று கூட இயங்காத நிலை உள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பளுகல் பேரூராட்சியில் ஒப்பந்தப்பணிகளை மேற்கொண்டதாகக் கூறி, பணிகளை செய்யாமலேயே பணிகளை செய்ததாகக் கூறி பண மோசடி செய்துள்ளனர். மேலும், அங்குள்ள தினசரி சந்தையை புதுப்பிப்பதாகக் கூறியும், ஆர்ச் அமைப்பதாகவும், பெயின்ட் அடிப்பதாகவும் தெரிவித்து, மன்றத் தீர்மானம் எதுவும் இல்லாமல் செலவினை மேற்கொண்டுள்ளனர். இதுபோன்ற முறைகேடுகளை மாவட்ட ஆட்சியருக்கு புகாராக தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நேர்வு தொடர்பான மன்றக் கூட்டங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எனவே, பளுகல் பேரூராட்சியில் நடைபெறும் மேற்கண்ட முறைகேடுகளை விசாரிக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 08.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான பளுகல் பேரூராட்சி செயல் அலுவலர் 08.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“தேர்தல் நேரத்தின்போது பணியாற்றியவர்களுக்கான ஊதியம், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஊதியம், மின் கட்டணம், குடிநீர் கட்டணம் செலுத்தியது போன்றவற்றிற்கு மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பளுகல் பேரூராட்சியில் மின் மோட்டார் ஏதும் புதிதாக வாங்கப்படவில்லை. ஆனால், அங்கு செயல்பட்டுக்கொண்டிருந்த மோட்டார்கள் பழுதடைந்ததால், அவை அவ்வப்போது பழுது நீக்கம் செய்யப்பட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பளுகல் பேரூராட்சியில் பணியாற்றும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கான ஊதியம், ஒப்பந்ததாரரின் கணக்கிற்கு ECS மூலம் வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலமாக பணியாளர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து Eligibility Certificate பெற்ற பின்னரே ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, பளுகல் பேரூராட்சியில் ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதையும், மன்றத் தீர்மானங்களின் அடிப்படையிலேயே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பளுகல் பேரூராட்சியில் ரூபாய் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பணிகளையோ அல்லது பொருட்களை வாங்கும்போதோ பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னரே பணிகளும், பொருட்களை வாங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றன. உதவி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அனுமதிகளின் நகல்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மேலும் பளுகல் பேரூராட்சியில் நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தை கொரானா தொற்று காலத்தில் இயங்கவில்லை. இதனால் அங்கு சந்தைக்கு வந்துக்கொண்டிருந்த மக்கள் அருகில் உள்ள கேரளா மாநில சந்தைகள் மற்றும் நடைபாதைகளில் அமைந்துள்ள கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தனர். சந்தையை மேம்படுத்தும் பொருட்டு, மன்றத் தீர்மானம் பெற்று சந்தை சரிவர இயங்க துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும், சந்தைக்கு வெளியே ஆர்ச் ஒன்றும் அமைத்தும், சுவர்களுக்கு வண்ணமும் தீட்டப்பட்டது. தற்போது மேற்கண்ட சந்தை நடந்து வருவதால், அதன் மூலம் பேரூராட்சிக்கு வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 08.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் விளக்கமாக பதிவு செய்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் அறியப்படுகின்றன.

மனுதாரர் பளுகல் பேரூராட்சியில் ஏற்படும் செலவீனங்களுக்கான வரவு செலவு கணக்கு விவரங்கள் கோரப்பட்டு எவ்வித தகவலும் அளிக்கப்படவில்லை எனவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் போது Eligiblity Certificate பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படுவதில்லை எனவும், பேரூராட்சியில் பைப்லைன் போடுவதிலும், போர்வெல் அமைப்பதிலும், மோட்டாரே வாங்காமல் புதிதாக மோட்டார் வாங்கியதாகவும் கூறியுள்ளார்.

தேர்தலில் பணியாற்றியவர்கள் ஊதியம், மின்கட்டணம், தூய்மை பணியாளர்கள் ஊதியம், குடிநீர் கட்டணம் செலுத்தாது போன்றவற்றிக்கு மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், பளுகல் பேரூராட்சியில் மின் மோட்டார் ஏதும் புதிதாக வாங்கப்பட்டவில்லையென்றும், அங்கு செயல்பட்டுக் கொண்டிருந்த மோட்டார்கள் பழுதடைந்ததால் அவை அவ்வப்போது பழுதுநீக்கம் செய்யப்படும் என்றும் மேலும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்தாரார்களிடமிருந்து Eligiblity Certificate பெற்ற பின்னரே ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும், மன்றத்தீர்மானங்களின் அடிப்படையிலேயே ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்திலும் மற்றும் அறிக்கையிலும் தெரிவித்துள்ளார்.

மேலும் கேரளா மாநிலத்தையொட்டி உள்ள பளுகல் பேரூராட்சி சந்தை கொரானா பேரிடர் காலத்தில் இயங்காத போது சந்தைக்கு வந்துக்கொண்டிருந்த பொதுமக்கள் அருகில் உள்ள கேரளா மாநில சந்தைகள் மற்றும் நடைபாதைகளில் அமைந்துள்ள கடைகளுக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தனர். சந்தையை மேம்படுத்தும் பொருட்டு, மன்றத் தீர்மானம் பெற்று சந்தை சரிவர இயங்க துண்டு பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டும், சந்தைக்கு வெளியே ஆர்ச் ஒன்றும் அமைத்தும், சுவர்களுக்கு வண்ணமும் தீட்டப்பட்டது. தற்போது மேற்கண்ட சந்தை நடந்து வருவதால், அதன் மூலம் பேரூராட்சிக்கு வருமானம் வந்துக்கொண்டிருக்கிறது என தெரிவித்துள்ளார்.

மேலும், பளுகல் பேரூராட்சியில் ஒப்பந்தப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றதாக தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் பொருட்களை வாங்குதலின் போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டதற்கான அனுமதி நகல்கள் செயல்அலுவலரால் இம்மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1) In Conclusion the Forum Orders as follows:

The Local Fund Audit Director is directed to constitute a committee to scrutinize the bills and vouchers passed by the Town Panchayat till date from the date of the constitution of the present Town Panchayat Council and detect any irregularities and violations in expenditure besides verifying whether tender procedure as per Tamil Nadu Tender Transparency Act has been followed by the Executive Officer of the Town Panchayat. This task should be completed within two (2) months from the date of the issue of the order.

2) The Commissioner Town Panchayats is directed to ensure that the payment to the Labour contractor outsourcing agency is properly made as complaints of fake attendance of the number of workers enrolled but do not turn up as per the reported figures are received from many Districts. Unless biometric attendance is in place this malpractice and sharing of spoils system cannot be changed. The Forum has its own suspicion whether all is well in the outsourcing contract of manpower system as it is vulnerable and feeble and not corruption-proof. The Complaint is that though the payment to the temporary workers who do not turn for duty is remitted by ECS by the outsourcing supply agency again the amounts are collected on a criminal and consensual basis by the defaulting workers, Town Panchayat staff concerned and the Agency. The Executive Offiers do not take cognizance of such frauds behind their back. This evil has to be removed and transparency restored by enforcing Biometric attendance in the State in all Town Panchayats to avoid complaints, malpractices and arrest the leakage of Government money.

2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஆர்.ஆர். ஹரிகுமார்,
கதவு எண்.1/36, மயூரம், புரவூர்,
மணிவிளை போஸ்ட் – 629 170.

2) செயல் அலுவலர்,
பளுகல் பேரூராட்சி, பளுகல் 629 170,
குமரி மாவட்டம் .

3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
குமரி மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம்.

4) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.அர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்